**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**113/2021

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 12.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவானந்தம் | ஜாதி | : | |
| த/பெயர் | : | கணேசன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது அப்பா கடந்த 2009- ஆம் வருடம் இறந்து விட்டார். என் அப்பா உயிருடன் இருந்த வரை நல்ல நிலையில் இருந்தார் என்றால் சரிதான். 2009- ஆம் வருடம் 6 வது மாதத்தில் தான் உடல் நிலை சரியில்லாமல் போனது. எனது கடைசி தம்பி 1ம் பிரதிவாதிக்கு என் தந்தையார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து எனக்கு தெரியாது. எனது நிரந்தர முகவரி சித்தேரி என்றால் சரிதான். அங்கு தான் நான் இருந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்தில் எனது சகோதரர் முருகன் கடந்த 2006-ல் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான்.

அந்த வழக்கில் எனது சகோதரர் சண்முகம், என் அப்பா மற்றும் என் மீதும் எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கடந்த 2007-ல் எனது தகப்பனார் அவருக்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து எனக்கும் எனது சகோதரர்களுக்கும் சொத்தை பிரித்து கொடுத்தார் என்றால் சரிதான். அவரது வாழ்வாதாரங்களுக்காக சில சொத்துக்களை வைத்துக்கொண்டார். புல எண்.151/ஏ 110 சென்ட் உள்ள ஓட்டு வீடு, புல எண்.151/1 ஏ 2 லுள்ள 17 சென்ட் இடம், புல எண்.42 லுள்ள 30 குழி நஞ்சை நிலம், இரண்டு மா நிலம் ஆகியவற்றை எனது அப்பா

வைத்துக்கொண்டார். மேற்கண்ட விவரங்கள் குறித்து உயில் ஆவணத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.188/2006 வழக்கில் என்ன தீர்ப்பு செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் விவரமும் எனக்கு தெரியுமா என்றால் நான் வெளிநாட்டில் இருந்ததால் எனக்கு சரியாக தெரியவில்லை.

நான் கடந்த 1995 லிருந்து 2005 சவுதியில் இருந்தேன். அந்த வழக்கு நடக்கும்போது நான் வெளிநாட்டில் இருந்தேன். எனது சகோதரர் முருகன் மன்னார்குடி வட்ட சட்டப்பணிகள் குழு மூலமாக கடந்த 2006-ல் ஒரு அறிவிப்பு அனுப்புள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

District Munsif
Mannargudi.